DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.37/2025

PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | பச்சமுத்து (Lw - 3) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 17.04.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சிங்களாந்தபுரம் காந்தி நகரில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். **(**சாட்சி எதிரியை அடையாளம் காட்டினார்**.)**

கடந்த 07.11.2024ம் தேதி மதியம் சுமார் 03.00 மணிக்கு மேல் நான் எனது அக்கா பேபி வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது அங்கு தினேஷ் மற்றும் சந்திரபாபு ஆகியோர் அங்கு வந்திருந்தனர். ஏற்கனவே சந்திரபாபுவிற்கும் எதிரிக்கும் சந்திரபாபுவின் மனைவியை எதிரியின் வீட்டிற்கு அழைத்து செல்வது சம்மந்தமாக ஏற்கனவே வாய் தகராறு இருந்து வந்தது. மாரியம்மன் திருவிழாவிற்காக அன்றைய தினம் எதிரியும் பேபியின் பக்கத்து வீடான சண்முகம் என்பவரது வீட்டிற்கு வந்திருந்தார். அப்போது ஏற்கனவே சந்திரபாபுவிற்கும் எதிரிக்கும் வாய் தகராறு இருந்து வந்ததால் அன்றைய தினம் எதிரி சந்திரபாபுவிடம் அங்கு இருந்த சண்முகம் வீட்டில் நின்று தகராறு செய்தார். பின்பு அருகில் இருந்த ஓடையில் வைத்து எதிரி பசுபதி

சந்திரபாபுவை கையால் அடித்தார். அப்போது நான் அங்கு சென்றேன். ஆஜர் எதிரியை தினேஷ் தடுக்க சென்றபோது ஆஜர் எதிரி தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து தினேசின் இடதுபக்க வயிற்றில் கத்தியால் குத்தினார். தினேஷ் உடனே சத்தம் போட்டு அலறினார். பின்பு ஆஜர் எதிரி கத்தியை எடுத்துக்கொண்டு சம்பவ இடத்தில் இருந்து சென்றுவிட்டார். பின்பு நாங்கள் தினேசை சிங்களாந்தபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். பின்பு அங்கு இருந்து மேல் சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சந்திரபாபுக்கும் அவரது மனைவிக்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்ததா என்றால் இல்லை. தினேஷ் சம்பவம் நடந்த காலத்தில் எங்கு வசித்து வந்தார் என்றால் எனது வீட்டில் தான் வசித்து வந்தார். சம்பவ இடத்தில் சம்பவம் நடந்தபோது நான் இல்லை என்றால் சரியல்ல நான் இருந்தேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் சந்திரபாபு எனது அக்கா மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தின்போது பேபி வீட்டில் இருந்ததால் சந்திரபாபுவிற்கும் எதிரிக்கும் என்ன பிரச்சணை ஏற்பட்டது என எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

சம்பவத்தின்போது சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் சந்திரபாபு, பேபி, சதீஸ், விஜயா, பானுமதி, மனோபிரியா மற்றும் சண்முகத்தின் உறவினர்கள் ஆகியோர்கள் இருந்தார்கள். யார் தகராரை ஆரபித்தார்கள் என்றால் எதிரிதான் சந்திரபாபுவை முதலில் அடிக்க ஆரம்பித்தார். சந்திரபாபுதான் எதிரியிடம் தகராறு செய்து சந்திரபாபு தான் எதிரியை முதல் அடித்தார் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் முடிந்துதான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றாலும் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. கத்தியை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். கத்தி எவ்வளவு நீளம் இருந்தது என்றால் சுமார் 1/2 அடி இருக்கும். சந்திரபாபுதான் கத்தியை எடுத்து வந்தார் என்றாலும் கைகளப்பில் சந்திரபாபுவிடம் இருந்த கத்தி தினேசின் வயிற்றில் பட்டு காயம் ஏற்பட்டுவிட்டது என்றாலும் சரியல்ல. காயம் எவ்வளவு அளவு இருந்தது என்றால் சுமார் 1 இன்ச் அளவு இருந்தது.

சம்பவம் நடக்கும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் சுமார் 03.00 மணி இருக்கும். யார் யார் அடித்துகொண்டார்கள் என்றால் எதிரியும் சந்திரபாபுவும் அடித்துகொண்டார்கள் தினேஷ் சண்டையை விலக்க சென்றார். சம்பவ நான் சொல்வது போல அத்தனை நபர்கள் இருந்திருந்தால் நாங்கள் சண்டையை விலக்கிவிட்டிருப்போம் என்றாலும் நாங்கள் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**